1987 ஏப்ரல் 4] [T. VENKATA REDDY]

(2) Fifty-seventh Report of the Committee on Public Accounts on paragraph 3.1 pertaining to Public (Chief Minister's Nutritious Meals Programme) Department in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1983-84 (Civil).

(ஆ) மனுக்கள் குழு.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சென்னை நகரிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள், குடிசைப்பகுதிகள், நடைபாதையில் அமைந்திருக்கும் குடிசைகளிலுள்ள மக்களுக்காக அடிப்படை தேவைகளை பெருக்கக் கோரி பெண்ணுரிமை இயக்கத்தினரிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீதான—குழுவின் இரண்டாம் அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

6. வரவு செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,79,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயில் பகுதிகளில் உள்ள கஞ்சங் கொல்லை கொண்டாயிருப்பு போன்ற பல கிராமங்களுக்கு பேருந்து வசதி இல்லாமல் மக்கள் அவதிப்படுவதை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,79,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."